வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 161/2022

வழக்கு சாட்சி LW7/PW6

| பெயர் | லோகுதாஸ் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | சுந்தரம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 59 |

தேதி 05.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூரில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பமானது அ.த.சா.ஆ. 7,8 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. 26.11.2022 அன்று நானும் எனது நண்பர் கமலும் காலை 12 மணியளவில் டீ குடிப்பதற்காக மஞ்சம்பாக்கம் அம்மா உணவகம் அருகே உள்ள டீக் கடைக்கு டீ சாப்பிடச் சென்றோம். அப்போது போலீசார் யமாகா பைக்கில் வந்தவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். கூட்டமாக இருந்தது என்னவென்றுக் கேட்டபோது போலீசார் சாட்சிக் கையொப்பம் செய்ய சொன்னார்கள். ஆஜர் எதிரியை தான் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அவர் பைக்கில் இருந்து நான்கு தங்க குன்டுகள் எடுத்துக் கொடுத்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கோவில் நிர்வாகி என்றால் இல்லை. நான் போவதற்க முன்பே கூட்டமாக இருந்தது என்றால் இல்லை நான் டீ சாப்பிடும் போது தான் எதிரி பைக்கில் வந்தவரை போலீசார் மடக்கினார்கள். போலீசார் என்ன விசாரணைச் செய்துக்கொண்டிருந்தார்கள் என்பது தெரியாது என்றால் ஆமாம். நான் டீ சாப்பிட்ட பின்பு தான் சென்றோம் என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வண்டியின் நம்பர், கலர் என்னவென்றால் தெரியாது. நான் உண்மையாகவே நகை கைப்பற்றிய போது இருந்திருந்தால் எத்தனை என்பதனை கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தில் எழுதிய தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால்

ஆமாம். நான் தட்டச்சு செய்த தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.